**<u>4வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை – 600 104</u>**

ஓ.பி.எண்- 3594/2024

பெயர்- டாக்டர் கோடீஸ்வரன்

தந்தை பெயர்- மாறப்பன்

தேதி - 20.11.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கபெற்ற சம்மனின் பெயரில் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணராக உள்ளேன். நான் எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர் அல்ல. மனுதாரரை 07.08.2025 அன்று சான்றிளிக்கப்பதற்காக பார்த்தேன். நான் மருத்துவ குழுவின் தலைவர் என்ற முறையில் பார்த்தேன். நான் நேரடியாக மனுதாரருக்கு எந்தவிதமான பரிசோதனை செய்யவில்லை.எங்கள் குழுவில் உள்ள மருத்தவர்கள் அவரை பரிசோதித்து கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலும் மருத்துவ குழுவின் தலைவர் என்று முறையிலும் நான் ஊனசான்று வழங்கினேன். மனுதாரருக்கு வலது காலில் டிபியா எலும்பு முறிவு ஏற்பட்டது. எலும்பு முறிவு மருத்துவர் கொடுத்த அறிக்யையின் படி மனுதாரர் வலது கால் டிபியா மற்றும் ஆர்எம் எலும்பு முறிவு எற்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. Chuput fracture என்றால் டிபியா எலும்பு கூடும் இடத்தில் தான் அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. அது தான் Chuput fracture ஆகும். மனுதாரருக்கு எலும்பு முறிவு காயங்கள் ஆறிவிட்டது ஆனால் அவர் காலில் சில செயல்பாடுகளில் கடினம் இருப்பதால் அதன் அடிப்படையில் ஊணத்தன்மையை கணக்கிடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மூட்டியில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ள காரணத்தினால் அவரால் நடக்கவும், மாடிபடி ஏறவும், தரையில் அமர்வதும் சிரமமாக இருக்கும் என்றால் சரிதான். மேற்படி காயத்தால் மனுதாரருக்கு ஊணதன்மை குறையாவோ கூடவோ வாய்ப்பு உள்ளது என்றால் அதை பற்றி என்னால் கருத்து கூற இயலாது. மனுதாரருக்கு தொடர் சிகிச்சை தேவைப்படும் என்றால் பிளேட் பொறுத்தப்பட்டுள்ளதால் தேவைப்படும். வழிகாட்டுதல் படி மனுதாரருக்கு ஊணத்தன்மை கணக்கிடு செய்ததற்கு Ex.C1 கணகீட்டு தாளை இணைக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் கோப்பில் உள்ளது. உச்சநீதிமன்றத்தின் வழக்காட்டின்படியும் மருத்துவ குழுவின் வழக்காட்டின் படியும் Prescribed Format இயலாமையை கணக்கீட்டு வழங்க வேண்டும் என்றும் Ex.C1 முழுமையானது அல்ல என்றால் சரியல்ல. மனுதாரருக்கு எவ்வாறு

ஊணத்தன்மை கணகீடப்பட்டுள்ளது என்றால் காயத்தினால் அவருக்கு ஏற்பட்ட Restriction காக 10 சதவிகிதம் வழிக்காக 1 சதவீகிதம் மொத்தம் 11 சதவிகிதம் நிரந்தர செயல்பாட்டு திறனுக்காக மருத்துவ குழுவால் கணிக்கப்பட்டு சான்று வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு சரியான முறையில் ஊணதன்மை கணிக்காமல் வழங்கப்பட்டுள்ள இந்த சான்று முழுமையாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வேறு மருத்துவ குழுவிற்கு மாறுபட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது ஆனால் பெரிய அளவிற்கு மாறுபட வாய்ப்பு இல்லை. மனுதாரருக்கு எலும்பு கூடிவிட்டதாக சொல்லும் பட்சத்தில் அதற்கு உண்டான Xray மற்றும் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் கோப்பில் உள்ளது. Ex.C1 முழுமையாக ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல. மனுதாரரை முழுமையாக பரிசோதணை செய்யாமல் அவருடைய மருத்துவ அறிக்கைகளை சரிவர பரிசீலனை செய்யாமல் வழங்கப்பட்டுள்ள இந்த சான்று முழுமையக ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மருத்துவ குழுவின் வழிகாட்டுதலின் படி மனுதாரருக்கு ஊணசான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் பிளஸ்டிக் சர்ஜரி, ஆர்தோபேடிக் சர்ஜிரி மற்றும் பி.எம்.ஆர் துறைக்கு பரிசோதனைக்காக 3 நாட்கள் சென்றுள்ளார். மனுதாரரை பரிசோதித்து வழங்கிய அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயராக உள்ளேன். முறையான வழிகாட்டுதல் படி Ex.C1 ஆவணம் வழங்கப்பட்டுள்ளது என்றல் சரிதான்.
மறுவிசாரணை இல்லை.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

ARUNDHADHI MAGESH

Digitally signed by ARUNDHADHI MAGESH